Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 235

வியாழக்கிழமை
18 ஜூலை 2024

ஆடி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"ஒரு லெக்சனை வைக்கிறதுக்கு எவ்வளவு வித்தையெல்லாம் காட்டுகினம் எண்டு பாத்தியளோ?"

# ஒக்ரோபர் முதல் வாரம் ஜனாதிபதித் தேர்தல்!

## நாட்டில் மருந்துத் தட்டுப்பாடே இல்லை

## தெல்லிப்பழை மருத்துவமனையில் விரைவில் அபிவிருத்திப் பணிகள்

## உதயன் பணிமனையில் வைத்து தெரிவித்தார் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஒக்ரோபர் மாதம் முதலாவது வாரத்தில் ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

☞ 11



## ஜனாதிபதி ரணிலை ஆதரிக்குமா தமிழரசு?

### சரவணபவனிடம் வினவிய சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணிலை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்குமா? என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான ஈ.சரவணபவனிடம் நேற்றுக் கேட்டார்.

☞ 11

## சாவகச்சேரி மருத்துவமனையின் பதில் மருத்துவர் ரஜீவ்தான்

### உறுதிப்படுத்தினார் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் தற்போது பொறுப்பு வகிக்கும் மருத்துவர் ரஜீவ்தான் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ்

☞ 11

## ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்துக!

கொழும்பு, ஜூலை 18

தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

☞ 11

## என்புமச்சை சிகிச்சை போதனாவில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையிலான சுகாதார அமைச்சின்

☞ 11

## ஜே.வி.பி.யுடன் வணிகர் கழகம் யாழில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி சட்டத்தரணி உட்பட 5 பேர் கொண்ட உயர் மட்டக் குழுவினருக்கும், யாழ்.வணிகர்

☞ 11

### எம்முடன் பயணிப்பாரெனில்

## ரணிலை பெரமுன நிச்சயம் ஆதரிக்கும்

### மஹிந்த நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

எம்முடன் பயணிக்க தயாரெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு நாமும் தயார் - என்று பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான

☞ 11

### ஜனாதிபதித் தேர்தல்

## ரணிலின் முடிவு ஜூலை 24இல்?

கொழும்பு, ஜூலை 18

தெற்கு அரசியலில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய விசேட அறிவிப்பொன்றை எதிர்வரும் 24ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கவுள்ளார் என்று தெரியவருகின்றது.

☞ 11

### வீட்டை உடைத்து

## 17 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு!

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு - முள்ளியவளை 3ஆம் வட்டாரப் பகுதியில், வீடொன்று உடைக்கப்பட்டு பெறுமதி

☞ 11

## இருவேறு ஆண்களால் சிறுமி துஷ்பிரயோகம்

### குடும்பஸ்தர் கைது காதலனுக்கு வலை

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் 15 வயதுடைய சிறுமியொருவர், இருவேறு ஆண்களால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், சந்தேநபர்களில் ஒருவரான குடும்பத்தலைவர்

☞ 09

### வெளிநாட்டு ஆசைகாட்டி மோசடி

## கிழக்குப் பல்கலையின் அலுவலர் கைதானார்!

### பல்வேறு மோசடிகளுடன் அவருக்குத் தொடர்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வெளிநாட்டு ஆசைகாட்டி 47 இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அலுவலர் ஒருவர், கைது செய்யப்பட்டுள்ளார்.

☞ 09

### 30 வருட பிணக்கு முடிவுக்கு வந்தது

## காணி கோயிலுக்கே சொந்தம்; நீதி கிடைத்தது கண்ணகிக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 18

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலய பின் வீதியின் உரிமை தொடர்பான பிணக்கு விளையாட்டுக்கழகம் ஒன்றுக்கும், ஆலயம் சார்பான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கும் இடையில் 30 வருட காலமாக இடம்பெற்றுவந்த நிலையில், பின் வீதியின் காணி உரிமை ஆலயத்துக்கு உரித்தானது என யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணாம்பிகை ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி சி.கனகசிங்கம் தெரிவித்ததாவது:- வட்டுக்கோட்டை

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலிழக்கும் 'சி.ரி.' ஸ்கான்கள் அக்கறையின்றி சுகாதாரத்துறை

## மருத்துவக் கட்டமைப்பில் நெருக்கடி

கொழும்பு, ஜுலை 18

அரசு மருத்துவமனை அமைப்பிலுள்ள 44 'சி.ரி.' ஸ்கான் இயந்திரங்களில் 7 இதுவரை முற்றிலும் செயலிழந்துவிட்டன. இதனால் மருத்துவமனைக் கட்டமைப்பு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்றும் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரத்தினபுரி பொது மருத்துவமனை, கரவனெல்ல ஆதார மருத்துவமனை, அம்பிலிபிட்டிய மாவட்ட பொது மருத்துவமனை, அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, கல்முனை ஆதார மருத்துவமனை, களுத்துறை பொது மருத்துவமனை மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு என்பனவற்றின் 'சி.ரி.' ஸ்கான்கள் முற்றாகச் செயலிழந்துள்ளன.

இந்த இயந்திரங்கள் பழுதடைவால் நோய்களைக் கண்டறிவதில் தாமதம் மற்றும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் தாமதம் என்பன ஏற்படுவதோடு நோயாளிகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படுகிறது.

அத்துடன், நோயாளிகளை மற்ற மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதற்கு செலவிடும் பணமும் தற்போது அதிகரித்துள்ளது.

இத்தகைய நெருக்கடியை சுகாதாரத் துறை கவனிக்காதுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வேட்பாளர் யார்? பெரமுன பிளவு

## திண்டாடும் தலைமை

கொழும்பு, ஜுலை 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் இன்னமும் முடிவெடுக்க முடியாத சூழ்நிலைக்கு அக்கட்சி முகங்கொடுத்துள்ளதால் கட்சிக்குள் மூன்று குழுக்கள் உருவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று ஒரு தரப்பினரும், ரணிலோ அல்லது வேறு எவராக இருந்தாலும் பொதுஜன பெரமுனவின் சார்பில் அவர் களமிறக்கப்படவேண்டுமென ஒரு தரப்பினரும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் களமிறக்கப்படவேண்டுமென மற்றுமொரு தரப்பினரும் இயங்கி வருகின்றனர்.

இவர்களைக் கட்டுப்படுத்தமுடியாது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவும், முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவும் தடுமாற்றமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ச-இ)

# நல்லிணக்க சட்டவரைவு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜுலை 18

இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுச் சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்வேறு தரப்பினர் இந்தச் சட்டவரைவுக்கு மேலும் திருத்தங்களைமுன்மொழிந்துள்ளமையால் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான இடைச்செயலகத்தின் ஆலோசனைக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு சட்டவரைவில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

அந்தத் திருத்தங்களை உள்ளடக்கி சட்டவரைவை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும், இதற்கு முன்னர் இந்தச் சட்டவரைவுக்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கும் ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)



பரு. கரையோரத்தில்

# திடீர் சோதனை 17 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜுலை 18

வடமராட்சி - பருத்தித்துறை பிரதேசத்துக்கு உட்பட்ட கடற்கரையோரங்களில் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட யுக்திய நடவடிக்கை மூலம் 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரையோரங்களில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து மோப்பநாய் சகிதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் வெளிமாவட்டங்களை சேர்ந்த பல நாள் மீன்பிடி படகுகளும் இதன்போது சோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்தன.

இதன்போது நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் மற்றும் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்டவர்கள் என 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த பருத்தித்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஓ-100)

# அம்பலாங்கொடையில் துப்பாக்கிச்சூடு

## ஒருவர் சாவு



கொழும்பு, ஜுலை 18

அம்பலாங்கொட கந்த மாவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டின் முற்றத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரி தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# ஜனாதிபதியின் சலுகை; எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜுலை 18

கடந்த 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தில் கலந்து கொள்ளாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட விசேட சலுகைகள் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்து வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-66)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு இராணுவப் பாதுகாப்புத் தருக

## கல்வி அமைச்சு கோரிக்கை





கொழும்பு, ஜுலை 18

இலங்கையின் தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கு விசேட இராணுவப்பாதுகாப்பு வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்னவிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளில் இன்றையதினம் புதிய மாணவர் அனுமதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கைகளிலிருந்து விரிவுரையாளர்கள் விலகியுள்ளனர். தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஒன்றாக இவ்வாறு விரிவுரையாளர்கள் தங்களது பணிகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

மாணவர்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி மாணவர் அனுமதி செயற்பாடுகளில் குழப்பங்களை தடுக்கும் நோக்கில் கல்வியியற் கல்லூரிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ச-இ)

# கல்விசாரா ஊழியர் போதையுடன் கைது

கொழும்பு, ஜுலை 18

அரச பாடசாலையின் கல்விசாரா பெண் ஊழியர் ஒருவர் 210 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து மாத்தறை குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மிதிகம பிரதேசத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் மற்றும் போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்கால முரண்பாடு: அரசமைப்பில் திருத்தம்

## அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, ஜூலை 18**

**ஜனாதிபதியின் பதவிக்கால முரண்பாட்டைத் தீர்க்கும் வகையில் அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரையின் (ஆ) பிரிவைத் திருத்தம் செய்வதற்கான சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் தொடர்பில் முரண்பாடு நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

அதன்படி, 'ஆறு வருடத்துக்கு மேல்' என்பதற்குப் பதிலாக 'ஐந்து வருடங்களுக்கு மேல்' என அரசமைப்பின் 83 ஆவது உறுப்புரிமையின் (ஆ) பிரிவைத் திருத்த அமைச்ச ரவை ஒப்புதல் அளித்தது. இந்த நிலையில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அதன் பின்னர் அதனை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார். (ச-இ)

## மின்கட்டணப் பற்றுச்சீட்டு வழங்குவது கட்டாயம்!

கொழும்பு, ஜூலை 18

நுகர்வோர் கோரும்போது அச்சிடப்பட்ட மின் கட்டணத்தை வழங்குவது கட்டாயம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய மின்சாரக் கட்டணத் திருத்தத்துடன் இலங்கை மின்சாரசபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விதித்துள்ள ஏழு நிபந்தனைகளில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளை பாடசாலையில் சேர்த்தல், வசிப்பிடத்தை சரிபார்த்தல் போன்றவற்றுக்கு அச்சிடப்பட்ட மின்கட்டண சொத்து தேவைப்படுவதால் பொதுமக்களின் கோரிக்கையை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## உமாமகேஸ்வரன் சிலை திறப்பு

வவுனியா, ஜூலை 18

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) செயலதிபர் க.உமாமகேஸ்வரனின் உருவச்சிலை வவுனியா மணிக்கூட்டு கோபுரச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கழகத்தின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் க.சந்திரகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் சிலையைத் திறந்து வைத்தார். (ஒ-18)

## நிமாலுக்கு அழைப்பாணை



கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்துக்குப் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் நுழைவாயில் பூட்டப்பட்டிருந்தமை தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் செய்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச)

### கைதிகள் அதிகரிப்பு

## சிறை அலுவலர்கள் பற்றாக்குறை

கொழும்பு, ஜூலை 18

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினிகபி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் 26 ஆயிரத்து 500 கைதிகள் சிறையில் இருந்தனர்.

கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் தேவை அதிகரித்துள்ளது.

சுமார் 1700 சிறைக்காவலர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## கடல் கொந்தளிப்பு எச்சரிக்கை

அடுத்த 24 மணிநேரத்துக்கு பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புத் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தலை விடுத்துள்ளது.

கடற்பகுதியில் மறு அறிவித்தல் வரை பயணிக்க வேண்டாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் கடல்சார் மற்றும் மீனவ சமூகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)



## தினம் தெரியுமோ?

வலிகாமம் வலயத்தில உள்ள பள்ளிக்கூடம் ஒண்டில படிக்கிற கனபிள்ளையளுக்கு போன வருசத் தொடக்கத்தில கடும் பிரச்சினை. கைகாலில கடி, சொறி, தேமல், சிரங்கு எண்டு கனபிள்ளையளுக்கு ஒரேயடியா வரத் தொடங்கிட்டுது. அந்தப் பள்ளிக்கூடம் இருக்கிற இடத்தில பெரிசா வசதியள் இல்லை. அந்த ஏரியாவில இருக்கிற சனங்களும் அவ்வளவு வசதியான ஆக்கள் இல்லை. அதோட ஒவ்வொரு வருசமும் இந்தப் பிரச்சினை இருக்கு. "இந்தக் கடி, சொறியால படிக்கேலாமல் இருக்கு" எண்டு பிள்ளையள் வீட்டில சொன்னால், "அதெல்லாம் வழமைதான். மாறிடும்" எண்ட மன நிலைதான் அங்கயுள்ள பெற்றாருக்கு. அதால அவையள் இதுகளுக்கெல்லாம் ஆஸ்பத்திரிக்கு போகமாட்டினம்.

கனபிள்ளையளுக்கு இப்பிடி தோல்வருத்தம் பரவினதால, பள்ளிக்கூட அதிபர், தங்கட பள்ளிக்கூடம் இருக்கிற ஏரியாவுக்குப் பொறுப்பான 'எம்.ஓ.எச்.' ஒப்பீஸுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். "எங்கட பள்ளிக்கூடப் பிள்ளையள் கனபேருக்கும் தோல்வருத்தம் பரவுது. அதால அவை படிக்கமுடியாமல் கஷ்டப்படுகினம். இதை மாத்திறதுக்கு உடனடியா ஒரு மருத்துவப் பரிசோதனை முகாம் எங்கட பள்ளிக்கூடத்தில வந்து வைக்கமுடியுமா?" எண்டதுதான் அவர் அனுப்பின கடிதத்தின்ர சாராம்சம். அதுக்கு அந்த 'எம்.ஓ.எச்' ஒப்பீஸ்காரர் என்ன செய்திருக்க வேணும்? இப்பிடி ஒரு தோல்வருத்தம் ஒரு பள்ளிக்கூடம் முழுக்கப் பரவி, பிள்ளையள் படிக்கேலாமல் அந்தரப்படுகினமே எண்டு உடனேயே ஓடியந்து, அவைக்கு ஏதும் மருத்துவம் செய்திருக்கோணும். ஒவ்வொரு வருசமும் ஒரு தொற்று நோய் வந்து பரவுதெண்டால், அதை நிப்பாட்டி அதுக்கு நிரந்தரமா தீர்வுகாண அவசரமா நடவடிக்கை எடுக்கவேண்டியதுதானே உந்த 'எம்.ஓ.எச்' ஒப்பீஸ்காரரின்ர முதல் வேலையா இருக்கவேணும். ஆனால் அவை என்ன செய்தினம் எண்டால், ஒரு மாதம் கழிய பதில்கடிதம் அனுப்பி இருக்கினம்.

"ஒவ்வொரு வருசமும் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் எங்கட காலஅட்டவணைப்படி போய் மருத்துவப் பரிசோதனை செய்யிறம். அந்த அட்டவணையின்படி உங்கட முறை வரேக்க, அதை வந்து செய்யிறம்" எண்டதுதான் அந்தப் பதில்கடிதத்தில இருந்த விசயம். அந்தக் கடிதம் வந்தும் ஒருமாதத்துக்குப் பிறகு 'பி.எச்.ஐ'யை அனுப்பினவை. அவரும் வந்து பாத்திட்டு, "ஆஸ்பத்திரியில கொண்டுபோய் காட்டுங்கோ" எண்டு சொல்லியிருக்கிறார். பிறகு பள்ளிக்கூட அதிபர் பெற்றாருக்கு விசயத்தை விளங்கப்படுத்தின பிறகுதான் அவை பிள்ளையளை ஆஸ்பத்திரியில காட்டி மருந்தெடுத்தவை.

இந்த வருசமும் அப்பிடி தோல் வருத்தம் அங்க வந்திருக்கு. சில பிள்ளையள் நாலைஞ்சு மாதம் உந்த தோல் வருத்தத்தால பள்ளிக்கூடமே வரேலையாம். ஆனால் பள்ளிக்கூடக்காரர் இந்தமுறை 'எம்.ஓ.எச்' காரருக்கு கடிதம் எழுதேலை. ஏனெண்டால் அவைக்கு எழுதியும் ஒண்டும் நடக்கப்போறேலை தானே. அதால பள்ளிக்கூடக்காரரே ஆஸ்பத்திரிக்கு பிள்ளையளைப் போகச்சொல்லி, மருந்தெடுக்கப்பண்ணினவையாம். அந்த இடத்துப் பிள்ளையள் அங்க பிறந்த குற்றத்துக்காக, ஒவ்வொரு வருசமும் தோல்வருத்தத்தோட படிக்க வேண்டியதுதான். 'எம்.ஓ.எச்' ஒப்பீஸ்காரரும் கால அட்டவணைப்படி, ஏசியை விட்டு வெளில வராமல் இருக்கவேண்டியதுதான்.

ஆயிரம் அர்ச்சுனாக்கள் வந்தாலும் உந்தச் சுகாதாரத் துறைக்காரர் திருந்தாயினம் போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் திட்டம் முல்லையில் இன்று

முல்லைத்தீவு, ஜூலை 18
ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.
இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தில் முல்லை வலயத்தில் 472 மாணவர்களும், துணுக்காய் வலயத்தில் 450 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். (ச-22-19)

## கொடுப்பனவு விநியோகம்

சாவகச்சேரி, ஜூலை 18
தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவுகள் இன்று தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரதேச சமூக சேவைகள் அலகால் உரிய பட்டியல் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. (ச-9)

## மணிவிழா



யாழ்ப்பாணம், ஜூலை 18
அச்சுவேலி, வளலாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர் க.ரவீந்திரனுக்கு மணிவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் தி.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் கோட்டக் கல்வி முன்னாள் பணிப்பாளரும் தற்போதைய மடு வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான நா.சிவனேசன் பங்கேற்று சிறப்பித்தார்.
நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)

## 'ஸ்டார்லிங்க்' இணைப்பு ஆராய குழு வருகை

கொழும்பு, ஜூலை 18
'ஸ்டார்லிங்க்' செய்மதி இணையச் சேவை இணைப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக எலான் மஸ்கின் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.
இந்த இணைய சேவை வழங்கலுக்கு வழிசெய்யும் வகையில் அண்மையில் இலங்கையின் நாடாளுமன்றில் தொலைத்தொடர்புகள் சட்டத்தில் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருந்தது.
இந்நிலையில் 'ஸ்டார்லிங்க்' நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




## பனங்கட்டிக்குட்டான் விற்பனை அமோகம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18
ஆடிப்பிறப்பை முன்னிட்டு, ஆடிப்பிறப்புக்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் யாழ்.மக்கள் ஆர்வம் காட்டினர்.
யாழ். நல்லூர், திருநெல்வேலி சந்தைகளிலும், பலசரக்கு வியாபார நிலையங்களிலும் அதிகளவில் அவை விற்பனை செய்யப்பட்டன. (ச-25-27)



ஆடிப்பிறப்பை முன்னிட்டு யாழ்.நகரில் பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாகவுள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு நேற்றுக் காலை சிறப்புற இடம்பெற்றது. (ச-17,66)



## சமூகசேவையாளர் விருது வழங்கல்

கொடிகாமம், ஜூலை 18
சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் நிர்வாக இயக்குநர் இரா. மதிகரனுக்கு, ஜெம் சர்வதேச பல்கலைக்கழகத்தால் உலக சமூகசேவையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.
உரும்பிராய் சித்திவிநாயகர் திருமண மண்டபத்தில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்துகொண்டார். (ச-25-159)

## தையிட்டியில் நாளை போர்

தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்ற வலியுறுத்தியும், பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டுமெனக் கோரியும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மீண்டும் தொடர் போராட்டம் மேற்படி விகாரைக்கு அருகில் ஆரம்பமாகவுள்ளது. (ம-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. செலவு செய்ய நேரிடும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். புதிய முயற்சியைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் உண்டாகும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம் :** பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும் உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். நீண்ட நாளாகத் தொடர்பில்லாத நண்பர்கள் தொடர்பு கொண்டு பேசுவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்க அதிகாரிகளின் அறிமுகமும் ஆதாயமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுகாதாரத்துறை சுயபரிசோதனை செய்யுமா?

சாவகச்சேரி மருத்துவமனையில் ஆரம்பித்து, வடக்கு மருத்துவத்துறையையே ஆட்டம் காண வைத்த மருத்துவர் அர்ச்சுனா விவகாரம் தற்போது நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கின்றது. மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக மருத்துவத்துறை சார்ந்தவர்களால் 5 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், அவை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. யார் மீதெல்லாம் மருத்துவர் அர்ச்சுனாவின் குற்றச்சாட்டுக்கணைகள் எய்யப்பட்டனவோ அவை குறித்த ஆதாரங்களை சமர்ப்பிக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. மருத்துவர் அர்ச்சுனாவுக்கு மட்டுமல்ல, சுகாதாரத் துறையில் ஊழல்கள், முறைகேடுகள் இருப்பதாக வீதிக்கு இறங்கிய மக்களுக்கும் இனிமேல் தான் உண்மையான சவால் காத்திருக்கிறது.

ஏனெனில் இது தனியே மருத்துவர் அர்ச்சுனா என்ற தனிநபர் மீதான வழக்கல்ல. மருத்துவர் அர்ச்சுனாவின் அளவுக்குமிஞ்சிய வீடியோக்கள், சமூக வலைத்தளப் பதிவுகள், சில அரசியல்வாதிகளுக்குச் சார்பான கருத்துகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மீதான விமர்சனங்கள், யாழ்ப்பாணத்துப்பெண்கள் பற்றிய பிற்போக்குத்தனமான பார்வை, பிற மருத்துவர்களின் கடமைக்கு இடையூறு, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் எனத் திடீரென எழுச்சி பெற்ற அவரது நாயக விம்பத்தைச் சிதைக்கும் சில விடயங்கள் அவராலேயே உருவாக்கப்பட்டன தான். ஆனால் அவற்றையெல்லாம் ஓரமாக வைத்து விட்டுப்பார்த்தால், சுகாதாரத்துறை தொடர்பில் அர்ச்சுனா உண்டாக்கிய அதிர்வலை மிகப்பலமானது. எவராலும் எதிர்த்துப் பேசமுடியாத ஒரு துறையாகவே சுகாதாரத்துறை இருந்து வந்தது. குறிப்பாக அண்மைக்காலமாக இடம்பெற்ற பல மருத்துவத்தவறுகள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் இருந்தே வந்தது. அத்துடன் நோயாளிகளை அரச மருத்துவமனைகளில் வேண்டாத விருந்தாளிகளாகக் கையாளும் மருத்துவர்கள், அதே நோயாளிகளை தனியார் மருத்துவமனையில் இராஜ உபசாரத்தோடும், தேனொழுகும் வார்த்தைகளோடும் மருத்துவம் செய்வதையும் பார்த்து மனதுக்குள் புழுங்கிய படிதான் மக்கள் இருந்தனர். அந்த மன அவசங்களை - புழுக்கங்களை- அந்தரிப்பை - மடை திறந்த வெள்ளம் போல வெளிப்படுத்த மருத்துவர் அர்ச்சுனாவின் 'உள்ளகக் கிளர்ச்சி' மக்களுக்கு உதவியது. அதனாலேயே அவர்கள், எந்தவொரு பிரதிபலனுமின்றி, யாருடைய தூண்டுதலுமின்றி மருத்துவர் அர்ச்சுனாவுக்காகப் போராட வீதிக்கு வந்தார்கள்.

தெற்கில் அரகலய ஆட்சியையே அசைத்ததைப் போன்று, வடக்கில் 'அர்ச்சுனாவுக்கான போராட்டம்' சுகாதாரத் துறைக்கு எதிராக வலுப்பெற்றது. ஒட்டுமொத்தமாக வடக்கு மாகாண சுகாதாரத்துறையில் நிலவும் குறைபாடுகளை, தாம் எதிர்கொள்ளும் சிக்கல்களை, தீராமல் இழுபடும் பிரச்சினைகளை மக்கள் துணிச்சலோடு வெளிப்படுத்தினர். சமூக ஊடகவெளியெங்கும் இத்தகைய போக்கையே கடந்த சிலநாள்களாக பரவலாகக் காணமுடிகின்றது. இந்தநிலையில் தனியே மருத்துவர் அர்ச்சுனா மீது வழக்குத் தொடுப்பதால் மட்டும் இந்தப் பிரச்சினை ஓய்ந்துவிடப்போவதில்லை என்பதே யதார்த்தம். ஏனெனில் இது வெறுமனே மருத்துவர் அர்ச்சுனா என்ற தனிநபரின் பிரச்சினை இல்லை. வடக்கில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் பிரச்சினை. அதனால் தான் அவர்கள் சுயமாகவே கிளர்ந்தெழுந்தார்கள். எனவே அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல், அர்ச்சுனாவின் வாயை அடைப்பதில் மட்டுமே சுகாதாரத்துறையினர் அக்கறை காட்டுவார்களானால் இந்தப் பிரச்சினை மீண்டும் கொழுந்துவிட்டெரியக் கூடும். மக்களின் எழுச்சிக்கு மதிப்புக் கொடுத்து, அவர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள், குறைகளைத் தீர்க்கவும், சுகாதாரத்துறைக்குள் இருக்கும் 'களைகளை' அகற்றி சுத்தப்படுத்தவும் பக்கச்சார்பற்ற, காத்திரமான நடவடிக்கைகளே இந்தப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அமையமுடியும். சுகாதாரத்துறை தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து, புத்துயிர்பெற்று, மக்களிடம் நன்மதிப்பை உயர்த்துவதற்கு காலம் ஒரு தருணத்தை வழங்கியிருக்கிறது. அதனை வடக்கு மாகாண சுகாதாரத்துறை சரிவர நிறைவேற்றுமா? என்பதே இப்போது மக்களிடம் எஞ்சியுள்ள கேள்வி.



# அரசின் திருகுதாளம் சட்டத்தை நாடுவோம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறைகூவல்

கொழும்பு, ஜூலை 18

**அண்மைய வேலைநிறுத்தத்தின்போது கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு ஒரு தடவை கொடுப்பனவு வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை வலியுறுத்தினார். 1986இல், உயர் நீதிமன்ற சம்பள மாற்றங்கள் தொடர்பில் வழங்கியுள்ள தீர்ப்பின் பிரகாரம் இதுபோன்ற சமத்துவமற்ற சம்பள அதிகரிப்பை ஏற்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் செல்வோம் என்றும் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கம் இவ்வாறு பாரபட்சம் காட்டக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார். (ச)

## இலத்திரனியல் அ.அட்டை ஓகஸ்ட் முதல் அறிமுகம்

கொழும்பு, ஜூலை 18

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அடுத்த மாதம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. புதிய அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகத்தின் பின்னர் மோசடிகள் இடம்பெறாது என்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்தார். (ச-இ)

## அலி சப்ரிக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 18

டுபாயிலிருந்து தங்கமும் அலைபேசியும் கடத்தி வந்த போது கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## கடல்சார் ஒத்துழைப்பு அமெரிக்கா இணக்கம்

கொழும்பு, ஜூலை 18

இலங்கையின் கடல்சார் பாதுகாப்பில் ஒத்துழைப்பை மேம்படுத்த இலங்கையும் அமெரிக்காவும் உடன்பட்டுள்ளன.

வொசிங்டனில் நடைபெற்ற 5 ஆவது இலங்கை-அமெரிக்கா கூட்டாண்மை உரையாடலின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. சுதந்திரமான, வளமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை 2 நாடுகளும் உறுதிப்படுத்தியதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## பேக்கரி உணவுகள் விலை குறையாது!

கொழும்பு, ஜூலை 18

மின் கட்டணம் குறைவடைந்துள்ள போதிலும் பேக்கரி உணவுகளின் விலையைக் குறைக்கமுடியாது என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பேக்கரிப் பொருள்களுக்குத் தேவையான மா, சீனி, முட்டை மற்றும் மாஜரின் ஆகியவற்றின் விலை குறைக்கப்படவில்லை.

முட்டையின் விலை மீண்டும் அதிகரிக்குமானால் பேக்கரி உணவுப் பொருள்களின் விலையை மீளவும் அதிகரிக்கநேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

19.07.2024

வெள்ளிக்கிழமை - ஆடி - 03

சுபநேரம் : 06.01 - 07.31

ராகுகாலம் : 10.31 - 12.01

**நாளொரு நல்வார்த்தை**


சுதந்திரம் விலைமதிப்பற்றது. ஆனால் அதைக் கவனமாக பயன்படுத்தவேண்டும்.

- லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வேலை வழங்குங்கள்”

# வடமாகாண பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம்



**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**‘அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி தொழிலை வழங்கு’ என்னும் கருப்பொருளில் வடக்கு மாகாணத்தி னுள்ள வேலையில்லாத பட்டதாரிகள் ஒன்றியத்தின் ஏற்பாட் டில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கி ழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.**

இதன்போது வேலையில்லாத பட்டதா ரிகள், ‘அரச நியமனத்தில் உள்வாரி, வெளிவாரி, பாகுபாடுவேண்டாம்’ ‘எல் லோருக்கும் ஒரே பட்டம் தான்’, ‘வயது ஏறுது வாழ்க்கை போகுது’, ‘வேலையை கொடு’ என்ற வாசகங்கள் எழுதிய பதா கைகளை ஏந்திய வண்ணம் கோஷங் களை எழுப்பி கவனவீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து சிதறு தேங்காய் அடித்தும் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். போராட்டத்தில் 40 க்கும் மேற்பட்ட வேலையில்லாத பட்டதாரிகள் பங்கு பற்றினர். (ச-27- 66)



கிளிநொச்சி, முருகானந்தா கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது. (ப-13)

## வவுனியாவில் புலமைப்பரிசில்

வவுனியா, ஜூலை 18

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு வவு னியா மாவட்ட செயலாளர் சரத் சந் திர தலைமையில் மதகுவைத்தகு ளத்தில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்டத் தில் 168 பாடசாலையைச் சேர்ந்த 898 மாணவர்களுக்கு புலமைப்பரி சில் வழங்கி வைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ் தான், வன்னி நாடாளுமன்ற உறுப் பினரும் அபிவிருத்திக் குழுத் தலை வருமான கு.திலீபன், வடமாகாண பிரதமசெயலாளர்சமன்பந்துலசேன, மேலதிக மாவட்ட அரசாங்க அதிப ர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் கள், வலயக்கல்விப் பணிப்பாளர் கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மாண வர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச-110-18)

## அரிசி உற்பத்தி இரட்டிப்பாக்கல்

கொழும்பு, ஜூலை 18

நெல் பயிரிடும் ஆறு பிரதான விவசாயப் பகுதிகளிலிருந்து நாட்டுக்குத் தேவையான மொத்த அரிசியையும் உற் பத்தி செய்யும் திட்டத்தை விவ சாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆரம் பிக்கவுள்ளது.

இதனடிப்படையில், தற்போது அதிக நெல் விளைச்சலைக் கொடுக்கும் அநுராதபுரம், அம் பாந்தோட்டை, பொலநறுவை, கண்டி, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய விவசா யப் பிரதேசங்களில் அதிக விளைச்சலைப் பெறுவதற் கான பணிகள் ஆரம்பிக்கப்ப டவுள்ளன.

அதன்படி ஆறு பகுதிகளில் அரிசி உற்பத்தியை இரட்டிப் பாக்குவதே இந்த வேலைத்திட் டத்தின் நோக்கமாகும்.

தற்போது நாட்டின் வருடாந்த நுகர்வுக்குத் தேவையான அரி சியின் அளவு 2.4 மில்லியன் மெற்றிக் தொன் ஆகும். 2023 ஆம் ஆண்டில் 4.5 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறு வடை செய்ய முடிந்துள்ளது என் றும் விவசாய அமைச்சு குறிப் பிட்டுள்ளது. (ச)





இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில், பச்சிலைப் பள்ளி பிரதேச மாணவர்களுக்கிடையில் தேசிய ஆக்கத்திறன் விருதுக்கான பேச்சாற்றல், கதாப்பிரசங்கம், நீதிநூல் ஒப்புவித்தல், நடனம், நாடகம், பண்ணிசை, கருத்தாடல் திறன் ஆகிய போட்டிகள் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. (ச-25-9)

### வட்டுக்கோட்டை மருத்துவமனையில்

# நோயாளர் விடுதி; சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவ மனையின் நோயாளர் தங்கி நின்று சிகிச்சைபெறும் விடுதியானது நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது டன் புதிதாக அமைக்கப்பட்ட வாக னத் தரிப்பிடம், நலன்புரிச்சங்க சிற் றுண்டிச்சாலை என்பனவும் திறந்து வைக்கப்பட்டன.

மருத்துவமனையை புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மருத்துவ அதி காரி எஸ்.செந்தூரானின் முயற்சியில் இந்த விடுதி மீண்டும் உத்தியோகபூர் வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பி.ஜி.மஹிபால, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் டி.பத்திரன, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன், பதவி நிலை மருத்துவ அதிகாரிகள், மருத்துவமனைப் பணி யாளர்கள், நலன்புரிச் சங்கத்தினர், சமூக மட்ட பொது அமைப்பினர் மற் றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-27- 66)



## உ.கிழங்கு விலையுயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்ட சந்தைகளில் உருளைக்கிழங்கின் விலை திடீரென அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித் துள்ளனர்.

சந்தைகளில் ஏனைய மரக் கறி வகைகளின் விலை அதிகரித்து வரும் நிலையில் உருளைக்கிழங்கின் விலை யும் அதிகரித்துள்ளதால் அன்றாட உணவுத் தேவை களைப் பூர்த்திசெய்ய முடியா மல் உள்ளதெனவும் நுகர் வோர் கவலை வெளியிட்டுள் ளனர்.

சந்தைகளில் உருளைக் கிழங்கு கிலோ 400 ரூபா வாக விற்பனை செய்யப்படு கின்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் காணிகள் விற்பனைக்குண்டு.

- A9 பாதைக்கு அருகாமையிலும், தண்ணீர்த்தாங்கிக்கு முன்பகுதியிலும், 11 அடி அகலப் பாதையுடன் 6 1/2, 5 பரப்புக் காணித்துண்டுகள் உண்டு.
- நன்னீர் ஊற்றுச் சூழலுடன் சகல வகையான விற்பனை நிலையங்களும், தொழில் நிலையங்களும் அருகாமையில் அமைந்துள்ளன
- தரகர் தொடர்பு தேவையில்லை.

தொடர்புகளுக்கு:

**077 318 8770, 076 653 3860**

## மன்னார் மாவட்ட கூட்டுறவு சபையின் கட்டட அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பின் திகதி மாற்றம்

மேற்படி எமது கூட்டுறவு சபை கட்டட அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஸ்டலாப சீட்டுழுப்புக்கான 06.07.2024ம் திகதியில் தவிர்க்க முடியாத காரணத்தால் இடம்பெற முடியாமல் போனது. இச் சீட்டிழுப்பானது எதிர்வரும் 31.10.2024 அன்று மன்னார் பஸ் நிலையத்திற்கு முன்பாக குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் இடம்பெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

காலம் :- 31.10.2024

இடம் :- மன்னார் நகர பஸ் நிலையத்திற்கு முன்பாக

நேரம் :- பிற்பகல் 5.00 மணி

(CR42839) J-1

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

1. தலைவர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் கீழ்வரும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 | 09 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Lot No | Bid Number | Item | Qty | Bid Security Amount | Bid document Issue | Pre bid Meeting | Bid closing/ Bid Opening | Non refundable fees |
| 01 | NP/30/02/04/ PSDG/ Bicycle/ 2024® | Ladies bike | 315 | 275,000.00 | From 18.07.2024 to 31.07.2024 | 25.07.2024 10.30AM | 01.08.2024 11.00 AM | 6,000.00 |
| | | Gents bike | 105 | | | | | |
| 02 | NP/30/02/04/PSDG/ Computer/2024 | Desktop computer | 15 | 85,000.00 | From 18.07.2024 to 31.07.2024 | 25.07.2024 11.30 AM | 01.08.2024 2.00 AM | 2,500.00 |
| | | Laptop computer | 03 | | | | | |
| | | Online UPS 3 KVA | 03 | | | | | |
| | | Network switch | 01 | | | | | |
| | | Air Blower | 01 | | | | | |

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.

3. வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றிருத்தலாகாது என்பதுடன் இலங்கைப் பிரஜையாக அல்லது தனிப்பட்டவராகவோ இருப்பதோடு கேள்விதாரர் மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்குரியதான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. கேள்விதாரர் குறிப்பிட்ட துறையில் இலங்கையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். இத் தகைமையினை வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் அட்டவனையின் பிரிவு 6 இல் காட்டப்பட்ட திகதிகளில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணி வரையான காலப்பகுதியில் வியாபார பதிவுச்சான்றிதழின் பிரதி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக அட்டவணையின் பிரிவு 9 இல் காட்டப் பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் . **தொலைபேசி இல :- 021 222 4782 தொலைநகல் :- 021 205 7103**

7. மேலதிக தகவல்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் வழங்கப்பட்டுள்ளது.

8. கேள்வி ஆவணங்கள் அட்டவணையின் பிரிவு 8 இல் காட்டப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது . திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் பெறுகை இலக்கம் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் அட்டவணையின் பிரிவு 8 இல் காட்டப்பட்ட திகதி, நேரத்தில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

10. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க (அட்டவணையின் பிரிவு 5 இல் காட்டப்பட்டவாறு) பொருத்தமான "கேள்விப்பிணை" ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

11. பெறுகை முன்ஆயத்தக் கூட்டம் அட்டவணையின் பிரிவு 7 இல் காட்டப்பட்டவாறு மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை.யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது திணைக்களத்தில் நடைபெறும்.

12. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு(பெரியது).**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம் .**

# அரச பேருந்து மீது தாக்குதல் பயணி ஒருவருக்குக் காயம்

மதுபான போத்தலால் அரச பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் பயணி ஒருவர் காயமடைந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை வவுனியா சாலைக்குரிய பேருந்து மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி மருத்துவமனையை அண்மித்த பகுதியில் வைத்து தனியார் பேருந்து காப்பாளர் ஒருவரால்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை மேற்கொண்ட நபர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-27)

# ஆடிப்பிறப்பு

கொடிகாமம், ஜூலை 18

சாவகச்சேரி பிரதேசசபையின் ஆடிப்பிறப்பு நிகழ்வும், கலை கலாசார விழாவும் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சர்வேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், நாவற்குழி கந்தையா கனகம்மா நிதியத்தின் க.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-22-159)

# கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 18

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் நடேசு தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம-66)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். இழுத்து பதிக்க ஒரு சதுர அடி-100 ரூபாய்

தொடர்பு: **077 334 1281**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை

01. முகாமையாளர்
02. காசாளர்
03. அலுவலக உதவியாளர்
04. பேருந்து நடத்துநர்

தொடர்புகளுக்கு:

**077 386 6250, 077 573 1318**

## கண்ணீர் அஞ்சலி



**வைத்திலிங்கம் கைலைநாதன்**

ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளரும், கூட்டுறவாளருமாகிய திரு.வைத்திலிங்கம் கைலைநாதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயரில் பங்கு கொள்ளும்


யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவித்தல்
## வேலணை பிரதேச சபை, வேலணை.

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைக்கு சொந்தமான பசுபதிப்பிள்ளை வீதியிலுள்ள தனது ஆதனத்தின் முன்பக்க எல்லை மதிலில் மாதா சுருவமொன்றினை நிறுவுவதற்கு திரு.ஜெயாத்துரை அற்புதராசா, 01 ஆம் வட்டாரம், பசுபதிப்பிள்ளை வீதி, புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு அவர்களினால் கட்டட அனுமதிக்கு முன்னளிக்கப்பட்டுள்ளது.

மாதா சுருவத்தினை குறித்த இடத்தில் நிறுவுவதற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 01.08.2024 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் **செயலாளர்,வேலணை பிரதேச சபை, வேலணை** எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.




செயலாளர்
வேலணை பிரதேச சபை,
வேலணை.

## வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
## நெடுங்கேணி
## பதிவிலக்கம்-V/263

### பகிரங்க ஏல விற்பனை

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான டிப்பர் வாகனம் விற்பனை செய்யப்படவுள்ளது. அசோக்லேடன் டிப்பர் வாகன இலக்கம்-NP-JC-5961. பார்வை இடும் இடம்-வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைப்பணிமனை நெடுங்கேணி. காரியாலய நேரத்தில் (காலை 8.30 - 4.30) வரை பார்வை இடலாம். ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவர்கள் (24.07.2024) வைப்புப்பணம் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.


இவ் ஏல விற்பனை ஆனது 25.07.2024 ந் திகதி காலை 10.00 மணிக்கு காரியாலய மண்டபத்தில் நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் பகிரங்க ஏல விற்பனையில் விடப்படும்.

**தொடர்புகளுக்கு**
**024 205 3196**
**077 950 0916**

கூட்டுறவு சேவையிலுள்ள
**தலைவர்**
**வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கம்**

(CR/42835) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 02 . 1942
மறைவு 16 . 07 . 2024

### நாகலிங்கம் குமாரசாமி

**(முன்னாள் சாலைப் பரிசோதகர் இ.போ.ச - கோண்டாவில்)**

கொக்குவில் மேற்கு கொக்குவில் அரசடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமாரசாமி நேற்று முன்தினம் (16.07.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மபூபதி அவர்களின் அன்புக் கணவரும், குமுதினி (அமெரிக்கா), குகதாசன் (குமுதன் - சுவிஸ்), குகாசினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகலிங்கம் (அமெரிக்கா), பிறேமலதா (சுவிஸ்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், கவிகேசா, கேசவி, நிராஜா, நிதர்சனா, லக்ஷ்மி, ஆதித், ஆரதி, இனியாள் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அரசடி**
**கொக்குவில் மேற்கு**
**கொக்குவில்.**

(CS/55690) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 737 1360**

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 01 . 1963
மறைவு 16 . 07 . 2024

### சசிதேவி சிவக்கொழுந்து

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு காக்கைதீவை வதிவிடமாகவும் கொண்ட சசிதேவி சிவக்கொழுந்து நேற்றுமுன்தினம் (16.07.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மனைவியும், சஞ்சுதன், சுயந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், குசலனின் மாமியாரும், பார்வதிதேவி, சாந்தவடிவேல், சுமதி ஆகியோரின் சகோதரியும், லோகேஸ்வரன், தயா, ஸ்ரீவீரேஸ்வரநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2024) வியாழக்கிழமை 69/212 காக்கைதீவு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 03.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மாதம்பிட்டி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
சஞ்சிதன் - 077 374 6250
குசலன் - 075 205 8173
சுயந்தினி - 077 332 9949

(CR/2833) J-1

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 03 . 1944
இறப்பு 16 . 07 . 2024

### திருமதி பத்மாதேவி வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், பிராமணோடை கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாதேவி வேலாயுதபிள்ளை நேற்று முன்தினம் (16.07.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பூரணம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வேலாயுதபிள்ளை அவர்களின் ஆருயிர் மனைவியும், நிரஞ்சனின் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர் - பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் வடக்கு மாகாணம்) பாசமிகு தாயாரும், சுஜாதாவின் (தலைவர், சிரேஸ்ட விரிவுரையாளர், வாத்திய இசைத்துறை, சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், சரவணமுத்து, கனகசிங்கம், பொன்னம்பலம், மற்றும் தையல்நாயகி (கனடா), சரஸ்வதிதேவி, புஸ்பதேவி, விஸ்வநாதன், சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருண், தருண் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிராமணோடை,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்**

(CS/55693) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 636 6046**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிழக்குப்...

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி ஏமாற்றப்பட்டவர்கள், வழங்கிய முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போதே மேற்படி அலுவலர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து மோசடியில் ஈடுபட்ட இளம் பெண்ணொருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில், அந்த யுவதியை வழிநடத்திய பிரதான குற்றவாளியாக மேற்படி பல்கலைக்கழக ஊழியரே காணப்படுகின்றார். அந்தப் பெண் பல்வேறு நபர்களிடம் இருந்து பெறப்பட்ட ஆறு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியை தற்போது கைதாகியுள்ள சந்தேகநபரின் வங்கிக் கணக்கில் செலுத்தியமையும் பொலிஸ் விசாரணைகளின்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## இருவேறு...

கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சென்றபோதே, அந்தச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிறுமியின் காதலன் ஒருவரும், முள்ளியவளைப் பகுதியினைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரும் சிறுமியுடன் தகாத உறவைப் பேணியமை தெரியவந்துள்ளது. இதையடுத்து, மேற்படி குடும்பத்தலைவர் கைதுசெய்யப்பட்ட நிலையில், காதலனைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-19)

# அமைச்சரின் கூட்டத்தில் அத்துமீறிய நபர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாணசபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், சுகாதாரத்துறை உயரதிகாரிகள், மருத்துவர்களின் பங்கேற்புடன் நேற்று இடம்பெற்றது. இதன்போது கூட்டத்தில் அநாமதேயமாக பங்கேற்ற ஒருவர் கலந்துரையாடலை முகநூல் வழியாக நேரலையில் ஒளிபரப்பியிருந்தார். இதனையடுத்து முகநூல் நேரலை செய்யவேண்டாம் எனவும் அவரை அங்கிருந்து வெளியேறுமாறும் அதிகாரிகள் தெரிவிக்கவே அதனை மறுத்து அவர் தொடர்ந்து அமர்ந்திருந்தார்.

இதன்போது கூட்டநிறைவில் அங்கு சுகாதார அமைச்சருடன் பேச முற்பட்ட நிலையில் அமைச்சர் அங்கிருந்து செல்லவே, கூட்டத்தில் நின்ற அதிகாரிகளுடன் அவர் குழப்பத்திலும் ஈடுபட்டார். அவர் தொடர்ச்சியாக முரண்பட்டதையடுத்து, சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து விரைந்து வந்த பொலிஸார் மேற்படி சந்தேகநபரைக் கைதுசெய்தனர். (அ-ம-20-26)



# உதைபந்துப் போட்டி: டைமன் ஸ்ரார் வாகை

மன்னார், ஜூலை 18

மன்னார் - சாந்திபுரம் 'வளரும் நட்சத்திரங்கள்' விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வாகை சூடியது டைமன் ஸ்ரார் அணி.

வடக்கு மாகாண ரீதியாக அழைக்கப்பட்ட 45 க்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிச்சுற்று நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் சாவற்கட்டு கில்லறி அணிக்கு எதிராக நானாட்டான் டைமன் ஸ்ரார் அணி களமிறங்கியது. இதன்போது 4:2 என்ற கோல் கணக்கில் டைமன் ஸ்ரார் அணியினர் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்திபுரம் பங்குத்தந்தை, வளரும் நட்சத்திரங்கள் விளையாட்டுக்கழக வீரர்கள், சாந்திபுரம் கிராம அலுவலர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏல பூமியாகிய இலங்கை

## எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

பொய்யான தோற்றப்பாடுகளை உருவாக்கி, சர்வதேச பேச்சுகளை நடத்தமுடியாது. எமது நாடு தற்போது ஏல பூமியாக மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு குழு கொள்முதல் முறைகளைப் பின்பற்றாமல் முதலீட்டை ஈர்ப்பதாக கூறிக்கொண்டு, நட்புவட்டார முதலாளித்துவ நண்பர்கள் கும்ப லொன்றுக்கு வளங்களை சூறையாடவும், கூடிய இலாபமீட்டவும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. இது ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கைப் போக்கல்ல. மனிதாபிமான முதலாளித்து வத்தையும் சமூக ஜனநாயகத்தையும் ஒன்றிணைத்த நடுத்தர பாதையே நாட்டுக்கு முக்கியமானது.

76 ஆண்டுகால வரலாற்றை ஐக்கிய மக்கள் சக்தி அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக மாற்றியமைத்துள்ளது. இதுவே மக்கள் கோரிய முறைமை மாற்றம்.

ஏனைய கட்சிகளைவிட ஐக்கிய மக்கள் சக்தி பேச்சிலும் செயலிலும் அதை நிரூபித்துள்ளது. இந்த நாடு கட்டியெழுப்பப்பட வேண்டுமானால், தரவுகளை மையமாகக் கொண்ட, சாட்சி, ஆதாரங்களை மையமாகக் கொண்ட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவேண்டும். இதன் மூலம் வங்குரோத்து நிலையைத் தவிர்க்க முடியும்.

சட்டத்தின் ஆட்சியைக் கொண்டமையாத சமூகமே இன்றுகாணப்படுகிறது. கொலைகள் அலைமோதுகின்றன. கொசுக்களைப் போல மக்கள் கொல்லப்படுகின்றனர். சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்க வேண்டுமானால் அரசியல்வாதிகள் கொலைகாரர்களின் அடிமைகளாக மாறக் கூடாது - என்றார். (ஒ-இ)



## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### சிவத்திரு கந்தையா குமாரசுவாமி

தோற்றம் : 23.05.1929 மறைவு : 15.07.2024

சடையம்மா மடங்களுக்கான பரிபாலன சபையின் சீவிய கால உறுப்பினரும் தனது எட்டு வயதிலிருந்து இறுதிக்காலம் வரை சடையம்மா விட்டு சென்ற பணிகளை தொடர்ந்து ஆற்றியவருமான அமரர் சிவத்திரு கந்தையா குமாரசுவாமி ஐயா அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்

சடையம்மா மடங்களின் பரிபாலனத்துக்கான மகா சபையினர்



## தேர்தலை இலக்குவைத்தே மின் கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்தே மின் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கலாம் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எரிபொருள் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது, மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இது தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையாக இருக்கலாம்.

கட்டணங்கள் மேலும் குறைவடைந்தால் அது மக்களுக்கு நல்லது. ஜனாதிபதியுடன் எனக்கு தனிப்பட்ட ரீதியில் பிரச்சினை இல்லை. கொள்கை ரீதியில் வேறுபாடுகள் உள்ளன.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளமை தொடர்பில் ரணில், தம்மிக்க பெரேரா ஆகியோர் எமது கட்சிக்கு இன்னும் உத்தியோகப்பூர்வமாக தெரியப்படுத்தவில்லை எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

(ச-44)



ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

## தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் குரோதி வருடம் ஆனிமாதம் 25ம் நாள் (09.07.2024) செவ்வாய்க்கிழமை வைகுண்ட பதமெய்திய எமது குடும்பத்தலைவர்

### பிரம்மஸ்ரீ கணபதிசாமிக்குரு சுதர்சனக்குரு

(பிரதமகுரு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்)

அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளது

| | |
|---|---|
| 18.07.2024 வியாழக்கிழமை காலை 09.00 மணி | தசாகம் |
| 19.07.2024 வெள்ளிக்கிழமை | ஏகோதிஷ்டம் மாசிகம் |
| 20.07.2024 சனிக்கிழமை | சபிண்டிகரனம் |
| 21.07.2024 ஞாயிற்றுக்கிழமை | கிருகயக்ஞம், சமாராதனை |

இத்தினங்களில் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோவிலடி,
ஆவரங்கால்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

### சிறுமியை துஷ்பிரயோகம் சந்தேகநபர் தப்பியோட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில், 14 வயதுடைய சிறுமியொருவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், சந்தேகநபர் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றுள்ளார் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் மேற்படி சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து, சிறுமியிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களுக்கு அமைய சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, சந்தேகநபர் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றுள்ளதாகத் தற்போது சந்தேகிக்கப்படுகின்றது.

(ம-19)

## பெரமுனவுக்குள் தம்மிக்கவுக்கு ஆதரவில்லை!

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலில் தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பொதுஜன பெரமுனக் கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி வேட்பாளரை கட்சியின் நிறைவேற்றுக்குழுவே தீர்மானிக்கும். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை வளைத்துப் போடுமாறு ஜனாதிபதிக்கு எந்தவொரு நிபந்தனையையும் மொட்டுக் கட்சி விதிக்கவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க வேண்டும் என்பது மட்டுமே எமது நிபந்தனை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் யானைச் சின்னத்தில் போட்டியிடமாட்டார். ரணிலை ஆதரிக்கும் முடிவையே மொட்டுக் கட்சி எடுக்கும் என நம்புகின்றேன் - என்றார். (ச-25-44)

## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 01 . 1984

உதிர்வு 17 . 07 . 2024



### குணசிங்கம் சந்துரு

இமையாணன் வடக்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் சந்துரு நேற்று (17.07.2024) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணசிங்கம் - யோகஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இந்திராணி தம்பதியரின் மருமகனும், தமயந்தியின் அன்புக் கணவரும், கல்கிசனின் அன்புத் தந்தையும், தவராசா ( பாடசாலைக் கட்டடப் பரிசோதகர், ஓய்வுநிலை) - கெங்காதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மகுலசிங்கம்- தயாவதி தம்பதியரின் (கனடா) பெறாமகனும், பிரதாப் (ஆசிரியர், ஹாட்லிக்கல்லூரி), ஷாலினி, மதன்மோகன் (லண்டன்), உஷாந்தினி ( லண்டன்), வேணன் (சுவிஸ்), வாணி, கலைமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0766687751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலை...

மஹிந்த ராஜபக்ச நேற்று அறிவித்தார். சமகால அரசியல் விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே, மஹிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மஹிந்தவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவருடைய பதில்களும் வருமாறு...

**கேள்வி** - நற்செய்தி என்ன?
**பதில்** - நாம் வெற்றிபெறுவோம் என்பது தான்...

**கேள்வி** - ஜனாதிபதி வேட்பாளர் யார்?
**பதில்** - அது உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

**கேள்வி** - தேர்தலுக்கான ஏற்பாடு இடம்பெறுகின்றதே...?
**பதில்** - காலம் உள்ளது, நாம் அறிவித்த பிறகுதான் பலம் வாய்ந்த வேட்பாளர் தொடர்பில் தெரியவரும்.

**கேள்வி** - பொதுவேட்பாளர் பற்றி பேசப்படுகின்றதே?
**பதில்** - பொதுவேட்பாளராகக்கூட இருக்கலாம். கடந்த காலங்களிலும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் பொதுவேட்பாளர்களே களமிறங்கினர்.

**கேள்வி** - அடுத்த ஆட்சி பெரமுனவுடையதா?, பொதுவேட்பாளரின் உடையதா?
**பதில்** - எமது ஆட்சியாகவே அது அமையும். வெற்றி நிச்சயம்.

**கேள்வி** - ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் திட்டம் உள்ளதா?
**பதில்** - இன்னும் அவ்வாறான முடிவை எடுக்கவில்லை. எம்முடன் பயணிக்க அவர் தயாரெனில் நாம் ஆதரவு வழங்குவோம்.

**கேள்வி** - ரணிலை ஆதரிப்பதற்கான உங்களின் நிபந்தனைகள் எவை?
**பதில்** - அவற்றை ஊடகங்களிடம் கூறமுடியாது. (அ-ம-44)

## காணி...

தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயம் 100 பரப்பினைக் கொண்டதும் 15ஆம் நூற்றாண்டுக்கும் உரிய ஆலயமாகும். குறித்த ஆலயத்தினை நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை நிர்வகித்து வந்தது. இந்த நிலையில் குறித்த காணியில் மேற்குப் புற வேலி விளையாட்டுக் கழகமொன்றால் அடாத்தாக அழிக்கப்பட்டு விளையாட்டுக்கழகத்துக்கு உரித்தானது எனத் தெரிவித்து குறித்த கழகம் அத்துமீறிச் செயற்படத் தொடங்கியது.
இதனையடுத்து ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் சார்பில் சட்டத்தரணி சபாநாதன் மூலம் 1995 ஆம் ஆண்டளவில் ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 2008ஆம் ஆண்டு அவரது இறப்பினைத் தொடர்ந்து குறித்த வழக்கில் சட்டத்தரணியாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் சார்பாக நான் ஆஜராகி வந்தேன்.
குறித்த மேற்குப் புற (ஆலய பின்புற) காணி வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணம்பிகை ஆலயத்துக்கு உரித்தானது அல்ல எனவும் இந்தியாவின் சிவபுரி மடத்தின் காணி எனவும் குறித்த மடம் தமக்கு இந்தக் காணியினை குத்தகைக்கு வழங்கியுள்ளதாகவும் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. சிவபுரி மடத்துக்குரிய காணியாக இருப்பின் அவர்களே எதிராளியாக இருக்கலாம் மாறாக விளையாட்டுக்கழகம் இருக்கமுடியாது என்ற வாதம் எம்மால் முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த விளையாட்டுக்கழகத்தினர் சிவபுரி மடத்தின் மூலம் ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்க முனைந்த பொழுதிலும் சிவபுரி மடத்தினை எதிராளியாகக் கொள்ளபோதிய ஆதாரம் இருக்கவில்லை.
1995ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இந்த வழக்குக்கான தீர்ப்பு இன்று (நேற்று) யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சின்னத்துரை சதீஸ்தரன் தலைமையில் வழங்கப்பட்டது. வழக்காளிகளான ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினருக்கு கோரப்பட்ட நிவாரணங்கள் வழங்கப்பட்டதோடு எதராளிகளால் கோரப்பட்ட நிவாரணம் போதிய ஆவணங்கள் இன்மையால் நிராகரிக்கப்பட்டன- என்றார். (அ-ம-125)

## சாவகச்சேரி...

பத்திரண தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட பின்னர், ஊடகங்கள் சாவகச்சேரி மருத்துவமனையின் பதில் மருத்துவர் தொடர்பில் வினவிய போதே, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் தற்போது பொறுப்பு வகிக்கும் மருத்துவர் ரஜீவ் என்பதை சுகாதார அமைச்சர் உறுதிப்படுத்தினார். (அ-ம-20-26)

## ஒக்ரோபர்...

வடமாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையிலான குழுவினர், நேற்றுக் காலை உதயன் பணிமனைக்கு வந்திருந்ததுடன், உதயன் பத்திரிகையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஈ.சரவணபவன் மற்றும் ஆசிரிய பீடத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இதன்போதே, ஒக்ரோபர் மாதம் முதலாவது வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தன் முடிவை இன்னமும் அறிவிக்கவில்லையாயினும், அவர் நிச்சயம் போட்டியிடுவார். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. அதை மையப்படுத்தித்தான் தற்போது சில செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.
நாட்டில் நிலவிய மருத்துவ நெருக்கடிகள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. 850 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையில், தற்போது பற்றாக்குறையான மருந்துகளாக வெறும் 40 மருந்துகளே காணப்படுகின்றன. அந்தப் பற்றாக்குறையையும் நிவர்த்திக்கும் வகையில் பேச்சுகள் மற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
ஆயிரத்து 300 மருத்துவர்களும் 500 தாதியர்களும் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றிருந்த நிலையில், 15 மருத்துவர்கள் மீண்டும் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். நாடு இயல்பு நிலையை அடைந்தால், இனிவரும் மாதங்களில் மேலும் சில மருத்துவர்கள் நாட்டுக்குத் திரும்புவார்கள்.
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை நிலையமாகக் காணப்படுவதால், அதை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும். அதற்குரிய திட்டங்களும் தயார்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" - என்றார். (அ-ம-125)

## என்புமச்சை...

அதிகாரிகள் அடங்கிய குழு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்றுப் புதன்கிழமை கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டது.
இதன்போதே, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரத்தப் புற்றுநோய் மற்றும் அதனுடன் இணைந்த நோய்களுக்கு சிகிச்சை வழங்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையத்தை சுகாதார அமைச்சர் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.
விடுதிகள், சத்திரசிகிச்சைப் பிரிவுகளையும், மருத்துவமனையின் அரும்பொருள் காட்சியகத்தையும் பார்வையிட்ட குறித்த குழுவினர், மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மற்றும் மருத்துவர்களுடனும் கலந்துரையாடினர். மருத்துவமனையின் செயற்பாடுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.
இதன்போது குருதிமாற்றுச் சிகிச்சைக்கான உபகரணம் ஒன்று சுகாதார அமைச்சரால் மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. சுகாதார அமைச்சரால் மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றும் நடப்பட்டது.
குறித்த விஜயத்தின்போது சுகாதார அமைச்சின் செயலாளர் பி.ஜி.மஹிபால, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், மருத்துவமனை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-66)

## ஜனாதிபதி...

உதயன் பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். இதற்கு, தமிழ் மக்கள் மத்தியில் பொதுவேட்பாளர் தொடர்பான விவாதம் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே அது தொடர்பில் கட்சி கவனத்தில் கொள்ளும்.
அத்துடன், பிரதான வேட்பாளர்களுடன் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விவாதித்து கட்சியின் மத்திய குழு ஒரு முடிவை எடுக்கும் என்று சரவணபவன் தெரிவித்தார். (அ-ம-125)

## ரணிலின்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தலை விடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிட்டியுள்ள நிலையில், செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி அல்லது ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், ஜூலை 24 ஆம் திகதி விசேட அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை பெரும் பரபரப்பாகியுள்ளது.
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணிவேட்பாளராக சஜித் பெயரிடப்பட்டுள்ளார். ஜே.வி.பி. தனது வேட்பாளராக அநுரகுமாரவை அறிவித்துள்ளது. பெரமுன தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தனது வேட்பாளராக ரணிலை அறிவித்துள்ளபோதிலும், இந்த அறிவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி ரணில் இன்னமும் தன் நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. ஆதலால், ஜூலை 24 ஆம் திகதிய அவரின் அறிவிப்பு ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. (அ-ம-44)

## 17 லட்சம்...

யான நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
அரச உத்தியோகத்தரின் குடும்பமொன்று வாடகைக்கு வசித்துவந்த வீட்டிலேயே இவ்வாறு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருடப்பட்ட நகைகளின் பெறுமதி 17 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் முள்ளிவளைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## ஜனாதிபதித்...

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அறிவித்து அதனை நிறுத்தியது. ஆதலால் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். காலத்தை இழுத்தடிக்காமல், மக்களின் ஜனநாயக உரிமைக்கு சந்தர்ப்பம் வழங்கித் தேர்தலை உடன் நடத்தவேண்டும் - என்றார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியும், ஜனாதிபதித் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேலும் தெரிவித்தார். (அ-ம-113-66)

## ஜே.வி.பி.யுடன்...

கழகத்தின் நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கும் இடையிலான சிறப்புக் கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் பணிமனையில் இன்று பி.ப. 3 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தேசியக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன்னர் யாழ். வணிகர் கழகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டனர். இதன்போது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, 13 ஆம் திருத்தம் தொடர்பான நிலைப்பாடுகளைக் கட்சிகள் தெளிவுபடுத்த வேண்டும் என்று வணிகர் கழகத்தினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.
இதற்கு அமையவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய உணவுப் பெருவிழா இன்று

கோப்பாய்ப் பிரதேச செயலக சமூகம் நடத்தும் உத்தியோகத்தர்களின் பாரம்பரிய உணவுப் பெருவிழா, கோப்பாய்ப் பிரதேச செயலகப் புதிய மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய்ப் பிரதேச செயலர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இன்று வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கோப்பாய் சுகாதார மருத்துவப் பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ்.சிவசங்கரி, நவக்கிரி அரச மூலிகைத் தோட்ட, சித்த மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி மருத்துவர் வி.சிவகுலேந்திரா, கோப்பாய்ப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.ஜே.எர்ஷன் றோய், கோப்பாய்ப் பதில் மேற்பார்வை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் திருமதி ஜே.ஜாமினி, யாழ். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் மனையியல் ஆசிரியர் திருமதி பி.சர்மிளா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ப–66)

'கிளப் வசந்த' கொலையாளிகள்

# கோட்டைவிட்ட பொலிஸார்

கொழும்பு, ஜூலை 18

அத்துருகிரியவில் 'கிளப் வசந்த' சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக 10 பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களோ அல்லது அதைத் திட்டமிட்டவர்களோ இதுவரை கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துருகிரியவில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் கிளப் வசந்த மற்றும் மேலும் ஒருவர் உயிரிழந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திய இருவரும் தென் கடற்பகுதியிலிருந்து படகில் நாட்டை விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என்று விசாரணைக் குழுக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

இந்த வாடகை கொலையாளிகள் தப்பிச்சென்றுள்ளதாக தகவல் கிடைத்த பல இடங்களில் பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் சோதனையிட்டபோதிலும் அவர்கள் தொடர்பில் எவ்வித தடயமும் கிடைக்கவில்லை.

இந்தத் தாக்குதலுக்கு பல்வேறு வழிகளில் ஆதரவளித்த 7 பேரே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச–இ)

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684
(S/55548) J-1

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
15 • 12 • 1952

விண்ணில்
21 • 07 • 2010

### அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

(முன்னாள் உரிமையாளர், எரிக்கணேஷ் பல்மூக்குக் கண்ணாடியகம்)

*திதி: ஆடிமாதம் வளர்பிறை ஏகாதசி (18.07.2024)*

அப்பா என்றழைத்த எம் தெய்வமே !
ஆண்டுகள் பதின்நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யை விட்டு உயிர் பிரிந்து
இன்று பதின்நான்கு ஆண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது.
உங்களுடன் வாழ்ந்த கால நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது.
உங்கள் பொன்மொழியும் புன் சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா !
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம் அப்பா !!!

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

(CS/55689) J-1

யாழ் நகரில் எங்கும் இல்லாத
ஆடித்தள்ளுபடி



17.07.2024 தொடக்கம் 16.08.2024 வரை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன Design களிலான புத்தம் புதிய பெண்களுக்கான சாறி வகைகள், சல்வார் வகைகள், பட்டுப்பாவாடைகள், டொப் வகைகள் மொடன் சட்டைகள், சிறுவர்களுக்கான அனைத்து விதமான ஆடை வகைகள் மற்றும் ஆண்களுக்கான அனைத்து ஆடை வகைகள் அனைத்திற்கும்
15% முதல் 30% விலைக்கழிவுகளில்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
சொந்த மண்ணில்
சொந்தங்களுக்கான தெரிவு



SUXUS WEAR
சக்சஸ் வெயார்
New Clothes, New Fashion
இல: 102, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2997
Suxuswear@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org